# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

Registered as Newspaper

18.12.2020 | வெள்ளிக்கிழமை


## எண்மருக்கு இன்று தொற்று

யாழ்ப்பாணம், டிசெ.18

யாழ்ப்பாணத்தில் இன்று 8 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நல்லூரைச் சேர்ந்த 5 பேருக்கும்,

4

## கொரோனா நிலைமையில் கொண்டாட்டம் வேண்டாம்

*யாழ்ப்பாணம் மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் வேண்டுகோள்*

கொழும்பு, டிசெ.19

யாழ்ப்பாணம் மாவட்ட மக்கள் கொரோனாத் தொற்று பரவாதவாறு நத்தாரைக் கொண்டாட வேண்டும் என்று யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஸ் சேனாரட்ன கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போது தினமும் கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றனர். இனிவரும் காலங்களில் பொதுமக்கள் அவதானமாகச் செயற்பட வேண்டும். எதிர்வரும் நாள்களில் நத்தார் மற்றும் புதுவருடக் கொண்டாட்டங்கள் வருகின்றன. பொது

2

## படுக்கையில் உயிரிழந்த சாவ. சந்தை வியாபாரி!

சாவகச்சேரி, டிசெ.19

சாவகச்சேரி சந்தையில் பழ வியாபாரம் செய்யும் ஒருவர் திடீரென உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று இரவு நடந்துள்ளது.

கச்சாய் வீதியைச் சேர்ந்த சேகர் (வயது48) என்ப

2

## கொரோனா சிகிச்சைக்கு சென்ற சமயம் வீட்டில் கொள்ளை

*பருத்தித்துறையில் சம்பவம்*

யாழ்ப்பாணம், டிசெ.19

கொரோனா சிகிச்சைக்காக குடும்பம் ஒன்று அழைத்துச் செல்லப்பட்டிருந்த நிலையில், பூட்டி யிருந்த வீட்டை

2

# ஐரோப்பிய நிலைமை உருவானால் ஆபத்து!

### மக்களிடமிருந்து ஒத்துழைப்பை கோருகிறது சுகாதார அமைச்சு

**கொழும்பு, டிசெம்பர் 19**

**பொதுமக்களின் நடத்தை அடிப்படையிலேயே எதிர்காலம் தீர்மானிக்கப்படும். சுகாதார நடைமுறைகளை முறையாக பின்பற்றி மக்கள் பொறுப்புடன் செயற்படாவிட்டால் கொரோனா வைரஸ் பரவல் எமது கட்டுப்பாட்டைமீறி, ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட நிலைமை இலங்கையிலும் உருவாகக்கூடும்.**

2

## கிளாலி வாள்வெட்டில் ஒருவர் படுகாயம்!

கொடிகாமம், டிசெ.19

எழுதுமட்டுவாழ், கிளாலிப் பகுதியில் நடந்த வாள்வெட்டுச் சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த வாள்வெட்டுச் சம்பவம்

2

## 55 கர்ப்பிணிகளுக்கு கொரோனாத் தொற்று

*அட்டுலுகம பரவல் தீவிரம்*

கொழும்பு, டிசெ.19

களுத்துறை மாவட்டத்தில் கொரோனா வேகமாக பரவிவரும் நிலையில், அந்த மாவட்டத்தில் 55 கர்ப்பிணி பெண்களுக்கு இதுவரை வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செய்தி தொடர்பாளர் வைத்தியர் ஹரித

2





## பேராசிரியர்களாகினர் ரவிராஜும் கீதாஞ்சலியும்

யாழ்ப்பாணம், டிசெ. 19

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட இரண்டு மருத்துவ நிபுணர்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேரவை பேராசிரியர்களாக பதவியுயர்வு வழங்கியுள்ளது. மருத்துவ பீட பீடாதிபதி பேராசிரியர் சு.ரவிராஜ் மற்றும்

2



யாழ்ப்பாணம், காங்கேசன்துறைக் கடற்கரையில் உலோகப் பொருள் ஒன்று கரையொதுங்கியுள்ளது. இந்தப் பொருள் எங்கிருந்து வந்தது என்பது தெரியவில்லை எனக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர். இது சுனாமி மற்றும் நில அதிர்வை அறிவதற்காக கடலுக்குப் பொருத்தப்பட்ட கருவியாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.(எ-26)

## வான்பாயும் நிலையில் கிளிநொச்சி குளங்கள்

மக்கள் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தல்

கிளிநொச்சி, டிசெ.19

கிளிநொச்சி மாவட்டத்தில் அதிக நீர்வரத்தால் நீர்பாசனக் குளங்கள் அடைவு மட்டத்தை அடைந்துள்ளன. அதனால் தாழ்நிலப்பகுதிகளில் உள்ள மக்கள் அவதானமாக இருக்கவேண்

2

## ஹொட்டல்களில் இயங்கவுள்ள கொரோனா வைத்தியசாலை!

கொழும்பு, டிசெ.19

ஹொட்டல்களை சிகிச்சை நிலையங்களாக மாற்றிய பின்னர் தனியார் வைத்தியசாலைகளில் இருந்து சிகிச்சை பெற விரும்பும் கொவிட்19 தொற்றாளர்களுக்கு அவ்வாறான ஹொட்டல்களில் சிகிச்சை பெற வாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று இராணுவத் தளபதி லெப்ரி

2

# ஐரோப்பிய...

இவ்வாறு தொற்று நோய் ஆய்வு பிரிவின் பணிப்பாளர் சிறப்பு மருத்துவர் சுதத் சமரவீர இன்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது
வழமையாக டிசெம்பரில் இறுதி இரு வாரங்களிலும், ஜனவரி முதல் வாரத்திலுமே நாட்டில் அனைத்து பகுதிகளிலும் மக்கள் நடமாட்டம் அதிகமாகக் காணப்படும். அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் நீண்டதொரு விடுமுறை வழங்கப்படுவதால் உறவினர்களின் வீடுகளுக்கு செல்லுதல், கொள்வனவுகளில் ஈடுபடுதல், சுற்றுலா செல்லுதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.
இந்தக் காலப்பகுதியில் வீடுகளில் இருப்பவர்களை விடவும் வெளியில் பலர் இருப்பார்கள். ஆனால் இந்த முறை அவ்வாறு செயற்படமுடியாது செயற்படவும் கூடாது. மிகவும் அவதானத்துடன் நடந்து கொள்ளவேண்டிய காலப்பகுதி இதுவாகும்.
முக்கியமாக மேல் மாகாணத்திலும், கொழும்பு மாநகர எல்லையிலும் கொரோனா வைரஸ் வேகமாக பரவிவருகின்றது. அந்தப் பகுதிகளில் இருந்து வெளியிடங்களுக்கு சென்றால் அவ்வாறு செல்பவர்களில் எவருக்காவது வைரஸ் தொற்று இருந்தால் அவர்கள் செல்லும் பகுதிகளிலும் கொரோனா கொத்தணிகள் உருவாகக்கூடிய அபாயம் இருக்கின்றது.
நோய் அறிகுறிகள் தென்பட்டால் வைத்திய ஆலோசனை பெறவும். முடிந்தளவு வீட்டிலேயே இருக்கவும். வயது வந்தவர்கள், நாட்பட்ட நோயால் பீடிக்கப்பட்டவர்கள் வெளியில் வருவதை தவிர்த்துக்கொள்வதே பாதுகாப்பானதாக இருக்கும்.
சமூக இடைவெளி, முகக்கவசம் அணிதல், கைகளை கழுவுதல் போன்ற சுகாதார பழக்கவழக்கங்கள் தொடர்ச்சியாக பின்பற்றப்படவேண்டும். ஏனெனில் மக்களின் நடத்தையை பொறுத்தே எதிர்காலம் தீர்மானிக்கப்படும்.
அதேவேளை, உலகில பல நாடுகளில் கட்டுப்பாட்டை மீறி நாளாந்தம் கொரோனா வைரஸ் வேகமாக பரவிவருகின்றது. இலங்கையில் இன்னும் அவ்வாறானதொரு நிலைமை உருவாகவில்லை. கட்டுப்படுத்திக் கொள்ளக்கூடிய நிலைமையே காணப்படுகின்றது. அதனால்தான் சில பகுதிகள் தனிமைப்படுத்தப் பட்டுள்ளன. பரிசோதனைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளன.
நாட்டிலுள்ள அனைத்து மக்களும், நிறுவனங்களும் முழுமையான ஒத்துழைப்பை வழங்கினால் வைரஸ் பரவலை நிச்சயம் கட்டுப்படுத்தமுடியும். பரவலை குறைந்த மட்டத்தில் வைத்துக்கொள்ளக்கூடியதாக இருக்கும். ஒத்துழைப்பு கிடைக்காவிட்டால் வைரஸ் பரவல் என்பது எமது கட்டுப்பாட்டைமீறி மேற்குலகம் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் பரவியதுபோல வேகமாக பரவக்கூடும் - என்றார். (எ-44)

# படுக்கையில்...

வரே உயிரிழந்துள்ளார். இவர் இரவு வீட்டின் வெளிப்புறத்தில் படுத்திருந்தார் என்றும், மழையுடன், காற்று வீசியதை அடுத்து அவரை குடும்பத்தினர் எழுப்பச் சென்ற போது அவர் அசைவற்றுக் காணப்பட்டார் என்றும் கூறப்படுகின்றது.
அதையடுத்து அவர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது, அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.
திடீர் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளதால் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். சடலம் தற்போது சாவகச்சேரி மருத்துவமனையில் வைக்கப் பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் சாவகச்சேரிப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.(எ9)

# கிளாலி ...

இன்று சனிக்கிழமை அதிகாலை நடந்துள்ளது. கிளாலியைச் சேர்ந்த த.கஜேந்திரன் (வயது44) என்பவரே படுகாயமடைந்துள்ளார்.
வாள்வெட்டுத் தாக்குதலை நடந்தியவர்கள் தப்பியோடியுள்ளனர். படுகாயமடைந்தவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். மணல் பிரச்சினை ஒன்றின் காரணமாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்று படுகாயமடைந்தவரின் உறவினர்கள் சந்தேகம் தெரிவித்துள்ளார். இந்த வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பாக பளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ-159)

# கொரோனா சிகிச்சைக்கு...

உடைத்து அங்கிருந்த பொருள்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் பருத்தித்துறையில் நடந்துள்ளது.
பேலியகொட மீன் சந்தையுடன் தொடர்புபட்ட ஒருவர் பருத்தித்துறையில் தொற்றுடன் இனங்காணப்பட்டார். பின்னர் அவரது குடும்பத்தினருக்கும் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டது. அதையடுத்து தொற்றாளரின் மனைவி, குழந்தை, மாமி ஆகியோரும் சிகிச்சைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர். அதனால் கடந்த 5ஆம் திகதி முதல் அந்த வீட்டில் யாரும் இருக்கவில்லை.
இவர்கள் நேற்று சிகிச்சை முடிந்து வீடு திரும்பியிருந்த நிலையில், வீடு உடைக்கப்பட்டு பொருள்கள், பணம் என்பன திருடப்பட்டிருந்தன. 80 ஆயிரம் ரூபா பணமும், கமரா உள்ளிட்ட பல பொருள்களும் கொள்ளையிடப்பட்டுள்ளன. சிகிச்சை முடிந்து அவர்கள் திரும்பியுள்ளபோதும், அவர்கள் சில நாள்களுக்குத் தனிமைப் படுத்தப்படுவர் என்றும், அதன்பின்னர் இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.(எ26)

# கொரோனா...

மக்கள் நாட்டில் உள்ள சுகாதார நடைமுறைகளையும், மதத் தலைவர்களின் வழிகாட்டல்களையும் பின்பற்றித் தங்களின் கொண்டாட்டங்களில் முன்னெடுக்க வேண்டும். நத்தார் புதுவருடக் கொண்டாட்டங்கள் தொடர்பில் பொலிஸ் திணைக்களமும் சில நடைமுறைகளை அறிவித்துள்ளது. தேவாலயங்களில் மட்டுப்படுத்தப்பட்டவர்களுடன் ஆலய பூசை வழிபாடுகளை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. அவற்றைப் பொதுமக்கள் பின்பற்றிச் செயற்பட வேண்டும். ஒன்றுகூடுவதைத் தவிர்த்து கொரோனா நிலைமையைக் கருத்தில்கொண்டு மட்டுப் படுத்தப்பட்ட அளவில் நத்தார் மற்றும் புதுவருடக் கொண்டாட்டங்களை முன்னெடுங்கள் -என்றார். (எ-111)

# வான்பாயும் நிலையில்...

டும் என்று மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் அறிவுறுத்தியுள்ளது.
இன்று காலை 7 மணி வாசிப்பின்படி 36 அடி கொள்ளளவு கொண்ட இரணைமடு குளம் 32 அடி 8 அங்குலமாகவும், 26 அடி கொள்ளளவு கொண்ட கல்மடுக் குளம் 24 அடி 11அங்குலமாகவும், 25 அடி கொள்ளளவு கொண்ட அக்கராயன் குளம் 24 அடி 7 அங்குலமாகவும் உயர்ந்துள்ளது என நீர்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
அதேவேளை, கரியாலை நாகபடுவான்குளம், கனகாம்பிகைக்குளம், வன்னேரிக்குளம், குடமுருட்டி குளம், புதுமுறிப்பு குளம் ஆகிய குளங்கள் வான்பாய ஆரம்பித்துள்ளது.
இதேவேளை 12 அடி கொள்ளளவு கொண்ட பிரமந்தனாறு குளம் 10 அடி 5 அங்குலமாக உயர்ந்துள்ளது. தாழ் நிலப்பகுதிகளில் உள்ள மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என நீர்பாசனத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ற-222)

# 45 கர்ப்பிணிகளுக்கு...

அளுத்கே தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
கொரோனா வைரஸ் பரவக்கூடிய அச்சுறுத்தல் இல்லாத பகுதிகளில் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின்போது வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
வெள்ளவத்தை பகுதியில் நேற்று 300 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 12 பேருக்கு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இரத்தினபுரி நகர எல்லையிலும் வைரஸ் தொற்று வேகமாக பரவிவருகின்றது.
மக்கள் பொறுப்பற்ற விதத்தில் நடமாடினால் மாவட்டத்துக்குள்ளேயே கொத்தணிகள் உருவாகக் கூடிய அபா யம் இருக்கின்றது. இரத்தினபுரி மற்றும் களுத்துறையில் இது உறுதியாகியுள்ளது.
களுத்துறை மாவட்டத்தில் கொரோனா வைரஸ் வேகமாக பரவ ஆரம்பித்துள்ளது. கொழும்பைப் போன்று களுத்துறை மாவட்டம் தொடர் பிலும் கூடுதல் கவனம் செலுத்தப்படவேண்டும். களுத்துறை மாவட்டத்தில் மட்டும் 55 கர்ப்பிணி பெண்களுக்கு கொரோனா தொற்றியுள்ளது. அதில் 45 பேர் அட்டுலுகம பகுதியைச் சேர்ந்தவர்கள். என்றார்.(எ44)

# ஹோட்டல்களில்...

னெண்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
சமூகத்தில் சில பிரிவினர் பொதுவான சிகிச்சை முறைகளுக்கு உட்படத் தயங்கி அதற்குப் பதிலாகப் பணம் செலுத்தி தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற முற்படுகின்றனர். கொவிட் தொற்றாளர்கள் அதிகம் இனங்காணப்பட்டதை அடுத்து மாற்று நடவடிக்கைகளாக நாட்டின் சில வைத்தியசாலைகளுக்கு மேலதிகமாக முப்படையினரால் நிர்வகிக்கப்படும் தனிமைப்படுத்தல் மையங்களை, வைத்தியசாலைகள் அல்லது சிகிச்சை நிலையங்களாக மாற்றியுள்ளோம். நாட்டில் உள்ள 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கொவிட் 19 தொற்றாளர்களில், சுமார் 65 சதவீதமானவர்கள் இடைநிலை சிகிச்சை நிலையங்களில் உள்ளனர். சில நோயாளிகள் தனியார் வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற விரும்புகிறார்கள். அரச வைத்தியசாலைகளில் சுகாதார வசதிகள் போன்றவை குறைவாகக் காணப்படுவதால் அங்கு தங்க அவர்கள் விரும்புவதில்லை. அவர்கள் பிரத்தியேக அறை வசதிகளில் சிகிச்சை பெற விரும்புகிறார்கள். ஜனாதிபதியின் அறிவுறுத்தலுக்கு அமைய இது தொடர்பாக நாம் பல்வேறு கலந்துரையாடல்களை முன்னெடுத்துள்ளோம். நானும் சுகாதார அமைச்சரும் கடந்த வாரம் தனியார் வைத்தியசாலைகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினோம். கொழும்பின் முக்கிய தனியார் வைத்தியசாலைகளுடன் பேசினோம். நவலோக வைத்தியசாலை மற்றும் லங்கா வைத்தியசாலை ஆகியவை இந்த வேலைத் திட்டத்துக்கு விருப்பம் தெரிவித்துள்ளன. என்றார். (எ-இ)

# பேராசிரியர்களாகினர்...

மருத்துவபீட குழந்தை நல மருத்துவத் துறையைச் சேர்ந்த திருமதி கீதாஞ்சலி சத்தியதாஸ் ஆகியோருக்கே பேரவை பேராசிரியர்களாகப் பதவியுயர்த்தியுள்ளது.
சத்திரச் சிகிச்சை வல்லுநர் எஸ். ரவிராஜ், குழந்தை மருத்துவ வல்லுநர் திருமதி கீதாஞ்சலி சத்தியதாஸ் இருவரும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பேராசிரியர் தெரிவுக்கான சகல தேவைப்பாடுகளையும் நிறைவு செய்துள்ள நிலையில் நடத்தப்பட்ட மூன்று நிலை நேர்முகத் தேர்வுகளிலும் சித்தியடைந்து பேராசிரியர்களாக பதவியுயர்வு பெறுகின்றனர். அதை பல்கலைக்கழக பேரவை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மருத்துவ கலாநிதி பட்டம் பெற்று அதே பல்கலைக்கழகத்தின் மருத்துவப் பேராசிரியராக பதவி பெற்ற இரண்டாவது பேராசிரியர் என்ற பெருமையை சத்திரச் சிகிச்சை நிபுணர் எஸ். ரவிராஜ் பெற்றுள்ளார். அவர் கடந்த வருடம் ஒக்ரோபர் 14ஆம் திகதி தொடக்கம் பேராசிரியர் பதவி பெற்றார் என்றும் குழந்தை நல மருத்துவ வல்லுநர் திருமதி கீதாஞ்சலி சத்தியதாஸ், கடந்த வருடம் ஏப்ரல் 29ஆம் திகதி தொடக்கம் பேராசிரியர் பதவியைப் பெற்றுள்ளார் என்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேரவை இன்று சனிக்கிழமை ஒப்புதல் வழங்கியது.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் சத்திர சிகிச்சைத் துறையில் ரவிராஜ் 2010ஆம் ஆண்டு முதல் முதுநிலை விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். 2012ஆம் ஆண்டு அந்தத் துறையின் தலைவராக நியமிக்கப்பட்டார். 2015ஆம் ஆண்டு செப்ரெம்பர் 14ஆம் திகதி தொடக்கம் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட பீடாதிபதியாக நியமிக்கப்பட்டு இன்றுவரை அந்தப் பதவியில் நீடிக்கிறார். பிரிட்டன் பல்கலைக் கழகத்தில் மருத்துவப் படிப்பை நிறைவு செய்த குழந்தை மருத்துவ வல்லுநர் திருமதி கீதாஞ்சலி சத்தியதாஸ், 2003ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட குழந்தை மருத்துவத் துறையில் விரிவுரையாளராகப் பதவி பெற்றார். 2010ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட குழந்தை மருத்துவத் துறையின் முதுநிலை விரிவுரையாளராகப் பதவி உயர்வு பெற்று சேவையாற்றி வந்துள்ளார். (த)

# பொருளாதார விருத்திக்கே பட்ஜெட்டில் முன்னுரிமை

பதுளை, டிசெ.19

அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் கொரோனாத் தொற்றால் வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது என பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ச தெரிவித்தார். பதுளை ஊவா பல்கலைக்கழகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,



இன்று சுற்றுலாத்துறை வர்த்தகம் வீழ்ச்சியடைந்துள்ளது. வெளிநாட்டில் தொழில் புரிபவர்களிடமிருந்து மாத்திரமே வெளிநாட்டு பணம் எமக்கு கிடைத்தது. கொரோனாவால் வெளிநாட்டு நன்கொடைகளும் கிடைப்பதில்லை. அதேவேளை அரசாங்கத்தின் கடன் பெறும் நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. நாட்டுக்கு வரும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை 14 நாள்கள் தனிமைப்படுத்த வேண்டியுள்ளது. இந் நிலையிலும் கடந்த மாதம் புதிய தொழிற்சாலையை ஆரம்பித்தோம். செப்ரெம்பர் மாதத்தில் பில்லியன் டொலர் பெறுமதிக்கும் அதிகமான ஏற்றுமதி வருவாயை ஈட்ட முடிந்தது. இதனால் நம் நாட்டுக்கான எரிபொருள் மற்றும் ஔடத இறக்குமதிக்கு தடை ஏற்படவில்லை. இவ்வாறான சூழ்நிலையிலேயே 2021 வரவு - செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டது. வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக கிராமப்புற அபிவிருத்தி அடையாளம் காணப்பட்டுள்ளது - என்றார். (வ-இ)

# தனிமையிலிருந்து விடுவிப்பு

கல்முனை, டிசெ.19

கல்முனை ஸாஹிராக் கல்லூரி வீதி தொடக்கம் ரெஸ்ட் ஹவுஸ் வீதி வரையான பிரதேசங்கள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டன. நேற்று 150 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட ரெபிட் அன்டிஜென் பரிசோதனையில் 4 பேருக்கு மாத்திரமே தொற்று உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் கல்முனை தெற்கு பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி ஆகியோரின் ஆலோசனையின் பேரில் கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் அறிவுறுத்தலுக்கிணங்க அந்தப் பிரதேசங்கள் தனிமைப்படுத்தலில் இருந்து நீக்கப்பட்டன. (வ-இ)



# பருத்தித்துறையில் 42 பேருக்கு பி.சி.ஆர்.

பருத்தித்துறை, டிசெ.19

பருத்தித்துறை சுகாதார திணைக்களத்தினர் பருத்தித்துறை பொதுச்சந்தை மற்றும் அந்தப் பிரிவில் தனிமைப்படுத்தப்பட்டவர்களிடம் எழுமாறான பி.சி.ஆர்.பரிசோதனைகளை இன்று சந்தைக் கட்டடத்தில் நடத்தினர்.

இதன்போது 42 பேரிடம் மாதிரிகள் பெறப்பட்டு ஆய்வுக்காக யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ற-9,159)

# உயர்நீதிமன்றத் தீப்பரவல்: 57 பேரிடம் வாக்கு மூலம்!!

கொழும்பு, டிசெ.19

உயர்நீதிமன்ற கட்டடத் தொகுதியில் அண்மையில் ஏற்பட்ட தீப்பரவல் தொடர்பில் 57 பேரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்த கட்டடத் தொகுதியின் திருத்தப் பணிகளில் ஈடுபடும் ஊழி யர்கள், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் உயர்நீதிமன்ற பணியாளர்கள் ஆகியோரிடமே குற்றப்புலனாய்வுப் பிரிவினர் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படு கின்றது. (ற-இ)

# தென்மராட்சி சந்தைகளில் எவருக்கும் தொற்றில்லை

சாவகச்சேரி, டிசெ.19

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினரால் சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் சந்தைகளில் நடத்திய எழுமாற்று பி.சி.ஆர். பரிசோதனையில் பங்குபற்றிய 84 பேருக்கும் தொற்றில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மருதனார்மடம் சந்தையில் கொரோனாத் தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் இந்த எழுமாற்றுப் பரிசோதனைகளை கடந்த புதன்கிழமை நடத்தினர்.

சாவகச்சேரி பொதுச் சந்தையில் 57 பேரிடமும், கொடிகாமம் பொதுச் சந்தையில் 27 பேரிடமும் மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டன. இதன்போது 84 பேருக்கும் தொற்று ஏற்படவில்லை என உறுதிப்படுத்தப் பட்டது. (ற-9)

# வாகன விபத்தில் தனயன் மரணம் தந்தை படுகாயம்

மட்டக்களப்பு, டிசெ.19

மட்டக்களப்பு மீராவோடை பிரதேசத்தில் இன்றுகாலை இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றொருவர் காயமடைந்துள்ளார் என வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர். மீராவோடை பகுதியில் இருந்து கறுவாக்கேணி நோக்கி சென்று கொண்டிருந்த உழவு இயந்திரம், எதிரே வந்த பட்டா வாகனத்துக்கு இடம் கொடுத்த சந்தர்ப்பத்தில் உழவு இயந்திரத்தின் பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் உழவு இயந்தி ரத்தை முந்திச் செல்ல முயற்சித்து உழவு இயந்திரத்தில் மோதுண்டதிலேயே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். (வ-150)



# தென்னை மரத்தைத் தறிக்க இனிமேல் அனுமதியில்லை!

## அருந்திக்க பெர்னாண்டோ தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.19

இலங்கையில் தென்னை மரங்களைத் தறிப்பது மற்றும் தென்னம் காணிகளைத் துண்டாடுவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ தெரிவித்தார்.

இனிவரும் காலங்களில் தென்னைமரங்களைத் தறிப்பதற்கு அரசின் அனுமதியைப் பெற வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

சிலாபம் பகுதியில் நடந்த நிகழ்வொன்றில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:

நாட்டு மக்களுக்குத் தேவையயான அளவு தென்னை உற்பத்தி இடம்பெறுகின்ற நிலையிலும், தேங்காய்களை தொழிற்சாலைகளுக்கு வழங்குவதால் தேங்காய் விலை அதிகரித்துச் செல்கிறது.

தேங்காய் விலையைக் குறைக்க நடவடிக்கை எடுத்தாலும் அதை ஓரளவே கட்டுப்படுத்த முடிகிறது.

இந்த பிரச்சினைக்குத் தீர்வாக வெளிநாடுகளிலிருந்து சிறு அளவில் தேங்காயைக் கொள்வனவு செய்வது மற்றும் குளிரூட்டப்பட்ட தேங்காய் துருவலைப் பெற்றுக் கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்ட நிலையில் அதற்கான அனுமதி யும் கிடைக்கப் பெற்றுள்ளது. இந்த நிலையில் தென்னை மரங்களைத் தறிப்ப தற்கு அரசு தடைவிதித்துள்ளது - என்றார்.(ற-இ)

# இறைச்சிக்கடை ஊழியருக்கு தொற்று

## 52 பேருக்கு பி.சி.ஆர்.

திருகோணமலை, டிசெ.19

திருகோணமலை நகர சபை பகுதிக்குட்பட்ட மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள நகரசபைக்கு சொந்தமான இறைச்சிக் கடையில் பணிபுரியும் ஊழியர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்து அவருடன் தொடர்புபட்ட 52 பேருக்கான பி.சி.ஆர் பரிசோதனை இன்று மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, இறைச்சிக் கடைகளில் பணிபுரிவோர் மற்றும் அதனை அண்டிய குடியிருப்பாளர்கள் உட்பட திருகோணமலை சிறைச்சாலையில் இருந்து விடுதலையாகிய 12 நபர்கள் அடங்களாக மொத்தமாக 52 பேரின் பி.சி.ஆர் மாதிரிகள் பெறப்பட்டன. இதேவேளை இறைச்சிக் கடைகள் அனைத்தும் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (வ-40)

# ஜனாஸா எரிப்புக்கு எதிராக நீதிமன்றில் ரிட் மனுத்தாக்கல்

கொழும்பு, டிசெ.19

கொவிட் தொற்றால் உயிரிழப்பவர்களின் ஜனாஸாக்களை தகனம் செய்யும் நடவடிக்கைக்கு தொடர்ந்தும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தலையில் காயத்துக்குள்ளாகிய நிலையில் ஒருவர் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்தார்.

இவ்வாறு உயிரிழந்தவரை கொவிட் - 19 தொற்றால் உயிரிழந்துள்ளார் எனக் கூறி பலவந்தமாக எரித்தமைக்கு எதிராக அவரது மகன் மேன்முறையீட்டு நீதிமன்றில் ரிட் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

தெஹிவளை, களுபோவில பகுதியைச் சேர்ந்த எம்.ஆர்.எம். நிபால் என்பவரே இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார் அரசமைப்பின் 140 ஆவது அத்தியாயத்துக்கு அமைவாக, ஜனாஸாக்கள் எரிக்கப்படுவதற்கு உடனடியாக தடை உத்தரவை பிறப்பிக்கக் கோரி இந்த ரிட் மனு சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா ஊடாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.


இந்த மனுவில் சுகாதார அமைச்சர், சுகாதார அமைச்சின் செயலாளர், சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம், இராணுவத் தளபதி, பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தமது வீட்டில் எவருக்கும் கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்படாத நிலையில், தந்தைக்கு மாத்திரம் கொவிட் உள்ளது எனக் கூறி ஜனாஸாவைத் தகனம் செய்துள்ளனர் என்று மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த ரிட் மனு எதிர்வரும் ஆண்டு ஜனவரி மாதம் 19 ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. அன்றைய தினம் விடயங்களை முன்வைக்க பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் அனுப்பவும் நீதிமன்றம் உத்தரவிட்டது. (ற-இ)

## அன்டிஜென் பரிசோதனை: ஐவருக்கு தொற்று உறுதி!

கொழும்பு, டிசெ. 19



பண்டிகைக் காலம் ஆரம்பமாகவுள்ள நிலையில் மேல் மாகாணத்திலுள்ள மக்களிடமிருந்து ஏனைய பகுதிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று பரவாதிருக்க நேற்று (18) பயணிகளுக்கு எழுமாற்றாக அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளும் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இவ்வாறு நேற்று 451 பேருக்கு எழுமாற்றாக அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது 5 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது என இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். (ரி5 -இ)

## பி.சி.ஆர். முடிவுக்கமையவே எதிர்கால நடவடிக்கைகள்!

### கிழக்கு சுகாதார பணிப்பாளர் லதாகரன் தெரிவிப்பு

அம்பாறை, டிசெ.19

பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளுக்கமைய எதிர்காலத்தில் கொரோனா ஒழிப்பு தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும் என்று கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் அழகையா லதாகரன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கல்முனை பிராந்தியத்தில் கொரோனாத் தொற்று அதிகரித்து செல்கின்றதா இல்லையா என்பதை ஆராய்ந்துள்ளோம். ஜனாதிபதியின் ஆலோசனையின்படி கிராமங்கள் தோறும் குழுக்கள் அமைத்தலை உறுதிப்படுத்துதல் மற்றும் கிராமங்கள் தோறும் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தல் போன்றவற்றை மேற்கொள்வதுடன், எதிர்வரும் காலங்களில் கல்முனை பிராந்தியத்தில் இராணுவம் மற்றும் பொலிஸாரின் பங்களிப்புடன் சுகாதார நடை முறைகளை உறுதிப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. என்றார். (ரி5-இ)



## 2021ஆம் ஆண்டுக்கான திட்டங்களை முன்வைத்தது தேசிய விளையாட்டு சபை

கொழும்பு, டிசெ.19

2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மூலம் நடைமுறைப்படுத்தவுள்ள திட்டங்களை தேசிய விளையாட்டு கவுன்சில் இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சுக்கு முன்வைத்துள்ளது. இத்திட்ட முன்வைப்பில் இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச, தேசிய விளையாட்டு கவுன்சிலின் தலைவரும் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவருமான மஹெல ஜயவர்த்தன, இராணுவத்தளபதி சவேந்திர சில்வா மற்றும் அமைச்சின் அதிகாரிகள் ,தேசிய விளையாட்டு கவுன்சிலின் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (வ-ரி4)

## நத்தார் தினத்தில் கைதிகளைப் பார்வையிட அனுமதிகள் ரத்து!

கொழும்பு, டிசெ. 19

நாட்டில் தற்போது காணப்படும் கொவிட்- 19 நிலைமையைக் கருத்திற் கொண்டு நத்தார் பண்டிகையன்று கைதிகளைப் பார்வையிடுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது என சிறைச்சாலை திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும், இதுவரை 8ஆயிரம் கைதிகள் புனர்வாழ்வுக்கு உட்படுத்த ப் பட்டுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார். (ரி5 - இ)

## எண்மருக்கு....

சண்டிலிப்பாயைச் சேர்ந்த ஒருவருக்கும், உடுவிலைச் சேர்ந்த இருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முல்லேரியா ஆய்வுகூடத்துக்கு அனுப்பப்பட்ட 300 பேரின் பி.சி. ஆர். பரிசோதனை முடிவுகள் இன்று வெளியாகியுள்ளன. அதில் உடுவிலைச் சேர்ந்த இருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேநேரம் 110 பேருக்கு யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளும் வெளியாகியுள்ளன. அதில் நல்லூரைச் சேர்ந்த 5 பேருக்கும், சண்டிலிப்பாயைச் சேர்ந்த ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் மருதனார்மடத்தில் இனங்காணப்பட்ட தொற்றாளர்களின் உறவினர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.(எ-26)

## பாடசாலை கூரைக்கு குரங்குகளால் சேதம்



வவுனியா, டிசெ.19

வவுனியா நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய வளாகத்தினுள் பிரவேசிக்கும் குரங்குகளால் பாடசாலைக் கூரைகள் சேதமடைந்துள்ளன.

பாடசாலையின் வகுப்பறைக் கூரைகளை குரங்குகள் உடைத்துச் சேதப்படுத்துகின்றன. இதனால் மழைகாலத்தில் இந்தக் கூரை துவாரத்தினூடாக மழை நீர் உட்புகுவதால் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் பாதிக்கப்படு கின்றன. இதேவேளை மாணவர்களை விரட்டும் செயற்பாட்டிலும் குரங்குகள் ஈடுபட்டு வருகின்றன. (ற-402)

## கரம்பகத்தில் வெள்ளத்தால் அள்ளுண்டது மணல் வீதி!!

சாவகச்சேரி, டிச.19

எழுதுமட்டுவாழ் -கரம்பகம் பகுதியில் வாய்க்காலுடன் இணைந்த மணல் வீதி பெருவெள்ளத்தால் அள்ளுண்டு சென்றுள்ளது என அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

எழுதுமட்டுவாழ் காயாங்கடவை வீதி வேதக்கால் மற்றும் கரம்பகம் பிள்ளையார் கோயில் ஆகிய பகுதிகளுக்குள் செல்லும் வீதியில் உள்ள வாய்க்கால் மக்கள் பாவனைக்காக இரு சீமெந்து குழாய்கள் வைக்கப்பட்டு வெள்ளம் வழிந்தோடும் வகையில் அமைக்கப்பட்டிருந்தது.

அண்மைய மழை அதிகரிப்பால் வெள்ளம் குழாய்களுக்கு மேலாக பாய்ந்ததுடன் குழாயையும் உடைத்துப் பாய்ந்ததால் வீதி வெள்ளத்தால் அள்ளுண்டு சென்றுள்ளது. இதனால் அந்த வீதியால் மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாமல் உள்ளனர் எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பாக வட்டார உறுப்பினர் இ.தெய்வேந்திரம்பிள்ளையுடன் அந்த மக்கள் தொடர்புகொண்டு கேட்டபோது வெள்ளம் வழிந்த பின்னர் மணல் போட்டு நிரப்ப பிரதேச சபைத் தவிசாளருடன் தொடர்பு கொண்டுள்ளேன் எனவும் தெரிவித்தார். (ற-9)

# நியூசிலாந்து அபார வெற்றி!!

நியூசிலாந்து, டிசெ.19



பாகிஸ்தானுக்கு எதிரான முதல் ரி-20 போட்டியில் நியூசிலாந்து 5 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நியூசிலாந்து பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதல் ரி-20 கிரிக்கெட் போட்டி ஆக்லாந்தில் நடை பெற்றது. நாணயச்சுழற்ச்சியில் வென்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது.

பாகிஸ்தான் 39 ஓட்டங்கள் எடுப்பதற்குள் நான்கு இலக்கு களை இழந்தது. ஜேக்கப் டஃபி மூன்று இலக்குகளை வீழ்த்தினார். பாகிஸ்தான் அணித் தலைவர் சதாப் கான் 42 ஓட்டங்களும், பஹீம் அஷ்ரப் 18 பந்துகளில் 31 ஓட்டங்களும் பெற பாகிஸ்தான் 20 பந்துகளில் 9 இலக்குகள் இழப்புக்கு 153 ஓட்டங்கள் அடித்தது. ஜேக்கப் டஃபி 4 பந்துகளில் 33 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து 4 இலக்குகள் வீழ்த்தினார். குக்கெலின் 3 இலக்குகள் வீழ்த்தினார்.

பின்னர் 154 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் நியூசிலாந்து களம் இறங்கியது. தொடக்க வீரர் மார்ட்டின் கப்தில் 6 ஓட்டங்க ளில் ஆட்டமிழந்தார். ஆனால் மற்றொரு தொடக்க துடுப்பாட்ட வீரர் டிம் செய்ஃபெர்ட் 57 ஓட்டங்கள் விளாசினார்.

மார்க் சாப்மேன் 20 பந்துகளில் 34 ஓட்டங்கள் அடிக்க நியூசிலாந்து 18.5 பந்துகளில் 5 இலக்குகள் இழப்புக்கு 156 ஓட்டங்கள் எடுத்து 5 இலக்குகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. (ற-இ)



# அறிமுகப் போட்டி போன்ற உணர்வு!

## அஸ்வின் தெரிவிப்பு

புதுடில்லி, டிசெ.19

அடிலெய்ட் டெஸ்டில் முதல் சுற் றில் 4 இலக்குகள் வீழ்த்திய அஸ்வின், அறிமுக போட்டியில் களம் இறங்கியது போன்று உணர்ந்தேன் எனத் தெரி வித்துள்ளார்.

ஆஸ்திரேலியா - இந்தியா இடை யிலான முதல் டெஸ்ட் அடிலெய்டில் நடைபெற்று வருகிறது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா 244 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இந்தப் போட்டி யில் இந்தியா திணறும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் சுழல் பந்து வீச்சாளர் அஸ்வின் அபாரமாக பந்து வீசி ஸ்மித் உள்பட நான்கு பேரை வீழ்த்தி முத்திரை பதித்தார். உமேஷ் யாதவ், பும்ரா ஆகியோர் தலா 3 இலக்குகள் வீழ்த்த ஆஸ்தி ரேலியா 191 ஓட்டங்களில் சுருண்டது.

நேற்றைய 2 ஆவது நாள் ஆட்ட முடிவில் அஸ்வின் தெரிவித்ததா வது "சுமார் 10 மாதத்துக்குப் பின்னர் மீண்டும் டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாடிக் கொண்டிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

கொரோனா முடக்க நிலை காலத்தில் அதிகமாக பயிற்சி மேற்கொண்டேன். ஆகவே, இங்கே வந்து பந்து வீசுவதற்கு அது உதவியாக இருந்தது. களத்தில் இறங்கி விளையாடியது சிறந்த உணர்வு. மீண்டும் களம் இறங்கியதை நான் அறிமுக போட்டியாகவே உணர்ந்தேன். இதனால் மிகவும் மகிழ்ச்சியாக பந்து வீசினேன். ஸ்மித் இலக்கு மிகப்பெரியது- என்றார். (ற-இ)

# ஆஸி. தொடரில் பெடரர் இல்லை!



கான்பரா, டிசெ.19

2021 ஆம் ஆண்டு ஆஸ்திரேலிய பகிரங்க ரென்னிஸ் தொடரில் விளையாடவில்லை என்று ரென்னிஸ் நட்சத்திரம் ரோஜர் பெடரர் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய பகிரங்க கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் போட்டியில் ஆடுவது எனக்கு மிக வும் பிடித்தமான ஒன்று. ஆனால் முழங்காலில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட பின்னர், நான் இன்னும் முழுமையாக குணமடைய வில்லை. இதனால் இந்தப் போட்டியில் நான் பங்கேற்கவில்லை எனத் தெரிவித்தார்.

சுவிஸர்லாந்தின் ரென்னிஸ் நட்சத்திரம் ரோஜர் பெடரர், ஆடவர் ஒற்றையரில் 20 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்று சாதனை படைத்துள்ளார்.

இந்த ஆண்டு பெப்ரவரியில் இடது முழங்காலில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டார். அப்போது அவர் ஜூலையில் நடைபெறவுள்ள விம்பிள்டன் மற்றும் செப்ரெம்பரில் நடைபெறவுள்ள யு.எஸ்.பகிரங்க போட்டியில் கலந்து கொள்வேன். அதற்குள் முழுமையாக குணமடைந்து விடுவேன் என்று கூறியிருந்தார்.

ஆனால் கொரோனா காரணமாக இந்தப் போட்டிகள், முழுவதுமாக இரத்துச் செய்யப் பட்டன.

இதையடுத்து கடந்த ஜூலையில் அதே இடது முழங்காலில் இரண்டாவதாக ஒரு அறுவைச் சிகிச்சை செய்து கொண்டார். இதனால் அடுத்து வந்த யு.எஸ்.ஓபனிலும் அவர் ஆட வில்லை. 2021 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஆஸி. பகி ரங்க கிராண்ட்ஸ்லாமில் அவர் நிச்சயம் ஆடு வார் என்று செய்திகள் வெளியாகிய நிலையில், இந்தப் போட்டியிலும் அவர் ஆடப்போவ தில்லை என்று ரோஜர் பெடரர் தற்போது தெரி வித்துள்ளார். (ற-இ)

# மொஹமட் அமிர் ஓய்வு!

இஸ்லாம்பாத், டிசெ.18



பாகிஸ்தான் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான மொஹமட் அமிர், அனைத்து வடிவிலான சர்வதேச கிரிக்கெட்டில் இருந்தும் ஓய்வு பெற்றுள்ளார்.

இவர் டெஸ்ட் போட்டியில் இருந்து ஓய்வுபெறுவதாக முன்னதாக அறிவித்திருந்தார். அந்த அறிவிப்பால் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அதிருப்தி அடைதி ருந் தது என்று தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்த நிலை யில் அனைத்து வடிவிலான சர்வதேச கிரிக்கெட்டி லும் இருந்து ஓய்வு பெறுகிறேன் என மொஹமட் அமிர் அறிவித்துள்ளார்.

28 வயதான மொஹமட் அமிர், 36 டெஸ்ட் போட்டி களில் 119 இலக்குகளையும், 61 ஒருநாள் போட்டி களில் 81 இலக்குகளையும் 50 ரி- 20 போட்டிகளில் 59 இலக்குகளையும் வீழ்த்தியுள்ளார். (ற-இ)

## ஐ.எஸ்.எல். கால்பந்து:

# ஒடிசாவை வீழ்த்தி பெங்களூர் வெற்றி


புதுடில்லி, டிசெ.19

ஐ.எஸ். எல் கால்பந்துப் போட்டியின் 31 ஆவது லீக் ஆட்டத்தில் பெங்களூர் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

11 அணிகள் பங்கேற்கும் 7ஆவது ஐ.எஸ்.எல். கால்பந்துத் தொடர் கோவாவில் நடைபெற்று வருகிறது.

நேற்றுமுன்தினம் நடந்த 31 ஆவது லீக் ஆட்டத் தில் பெங்களூர்-ஒடிசா அணிகள் மோதின. இதில் பெங்களூர் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

பெங்களூர் அணிக்காக சுனில் சேத்ரி 38 ஆவது நிமிடத்திலும், சில்வா 79 ஆவது நிமிடத்திலும் கோல் அடித்தனர். ஒடிசா தரப்பில் டெய்லர் 71 நிமிடத்தில் கோல் அடித்தார்.



பெங்களூர் அணி பெற்ற 3 ஆவது வெற்றி இது வாகும். அந்த அணி 6 ஆட்டத்தில் 3 வெற்றி, 3 சமநிலையுடன் 12 புள்ளிகள் பெற்று, 3 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. ஒடிசா அணி 5 ஆவது தோல்வியைத் தழுவியது. அந்த அணி ஒரு புள்ளியுடன் 10 ஆவது இடத்தில் இருக்கி றது. (ற-இ)